# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்



செப்டம்பர் 2024

குடில் 7

விருந்து 22

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர் மாதனாங்குப்பம்**

**சென்னை 600 099.**

**044-26863177, 9677717455, 9677717456**

**sokaikeda2000@gmail.com, sokatamilavai2023@gmail.com.**

# நற்றமிழ்க்குடில்

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

## தமிழால் தழைக்கும் உலகு

**குடில் 7 - விருந்து 22 – செப்டம்பர் 2024**

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

# நற்றமிழ்க்குடில்


ஆசிரியர் குழு : வி. மாரிகவிதா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு
அ. உமா மகேஸ்வரி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
ஏ. ரம்யா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
கா. சுவாதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.



*Blog* : *sokatamil blogspot.com*
*Facebook* : *Soka Tamil Avai*
*Youtube* : *Sokatamilavai*
*E.mail* : *sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

## குடில் 7

## விருந்து 22

செப்டம்பர் 2024

# உள்ளே....

தலையங்கம்

மலரே

நூல் அறிமுகம்

பழமொழி நுண்பொருள்

அறிவியல் செய்திகள்

உணவே மருந்து

விடுகதைகள்

இசைக்கருவி

பொன்மொழிகள்

தோழிக்குக் கடிதம்

சொல் விளையாட்டு

தூரிகைத் தூரல்

*துறை நிகழ்வுகள்*

## தலையங்கம்

## ஆசிரியர்

ஆசிரியர் என்றாலே சிறப்புதான். எல்லா ஆசிரியர்களுக்கும் விருதுகள் கிடைப்பதில்லை. ஆனால் நம் வாழ்வில் சந்திக்கும் நமக்கு வழிகாட்டிய ஒவ்வொரு ஆசிரியர்களும், மாபெரும் விருதுகளுக்குத் தகுதி உடையவர்கள்.



வேலூர் ராஜாங்குப்பம் ஊராட்சி நடுநிலைப் பள்ளியின் ஆசிரியர் தெருவிளக்கு கோபிநாத் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வாகியுள்ளார். இவருடைய அம்மா பெயர் பானுமதி, அப்பா இராஜேந்திரன். இவர்கள் இருவரும் அரசுப் பள்ளியில் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். இவருடைய அண்ணன் ஜெகன்நாதன், தங்கை ரம்மணிபாய் ஆகியோரும் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். இவருடைய மனைவியும் உயர்நிலைப்பள்ளியில் வரலாற்று ஆசிரியராகப் பணிபுரிகிறார்.



கோபிநாத் 2005ஆம் ஆண்டு முதல் தன் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். மாணவர்களுக்கு ஆசிரியர் மீதான பயத்தைப் போக்கவும், ஆசிரியர் மாணவர் இடையேயான இடைவெளியைக் குறைப்பதற்காகவும் இவர் மாணவர்களைப் போன்றே அரசு சீருடையில் பள்ளிக்குச் சென்றார்.

அதுமட்டுமல்லாமல் படம் வரைந்து ஓவியம் மூலம் பாடம் மாணவர்களுக்குப் பாடங்களை நடத்தினார். மேலும் பாடம் எடுப்பதில் எதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில், பாடத்திற்கு ஏற்ப வேடம் அணிந்துச் செல்வார். திருக்குறள் நடத்தும் போது திருவள்ளுவர் வேடம், பாரதியார், ஔவையார் வேடங்களில் சென்று பாடம் நடத்துகிறார்.



இவர் தோல் பாவைக்கூத்தை முறைப்படி கற்றிருந்ததால் தோல் பொருட்களை வாங்கி அவற்றை பொம்மைகளாக்கி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். தினக்கூலி வேலைக்குச் செல்பவர்கள் மாலை நேரத்தில் கல்வி கற்க இரவு பள்ளி ஒன்றையும் நடத்தி வருகிறார். இப்பள்ளியில் 90 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

தெருவிளக்கு தன்னால் எவ்வளவு தூரம் வெளிச்சம் கொடுக்க முடிமோ அது போல தன்னால் இயன்ற வரை தன் கல்வி சேவையைச் செய்ய தொடங்கியதால் தெருவிளக்கு இரவுப் பள்ளியை நடத்தினார். இவ்வாறு கல்வியைத் அடுத்த தலைமுறையினருக்குச் கொண்டு சேர்க்க அயலாது முயன்று வருகிறார். இவர் நல்லாசிரியர் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஏற்றிவிடும் ஏணியாய் அடுத்தவர் வாழ்வில் ஒளியேற்றும் ஆசிரியர்களைப் போற்றுவோம்.

**வி. மாரிகவிதா**

**முதுகலைத்தமிழ், முதலாமாண்டு**

# மலரே

## வடவனம்

- சங்ககால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மலர் வடவனம்.
- வடவனம் தலைவியும் தோழியும் குவித்து விளையாடிய 99 மல்களில் ஒன்று.
- வடவனம், திருநீற்றுப் பச்சை எனப்படும்.
- வடவனம் பற்றிய குறிப்பு சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளது.
- வடபுலம், வடமலை, வடபொழில், வடமீன், வடவளம் எனும் சொற்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.
- வடவனம், வாகை, வான்பூங் குடசம் குறிஞ்சிப் பாட்டில் 67ஆவது அடியாக இடம் பெற்றுள்ளது.
- திருநீற்றுப் பச்சை, மூலிகையாகப் பயன்பட்டு வருகிறது.
- இதன் இலையைக் கசக்கி முகர்ந்தாலே தலைவலி, இதய நடுக்கம், தூக்கம் இன்மை ஆகியவைச் சரியாகும்.

- அகத்திய முனிவர் திருநீற்றுப்பச்சிலை - வாந்தி, கபநோய்களைக் குணப்படுத்துவதாகக் கூறியிருக்கிறார்.
- திருநீற்றுப் பச்சையின் விதைகள் இனிப்புச் சுவையைக் கொண்டிருந்தாலும், இதன் இலைகள் கார்ப்புத் தன்மை உடையது.
- திருநீற்றுப் பச்சை வாசனை திரவியம், சோப்பு மற்றும் தலை அலசும் திரவம் செய்யவும் பயன்படுகிறது.



- திருநீற்றுப் பச்சிலையில் இருந்து எடுக்கப்படும் வேதிப்பொருள் ஒன்று புற்று நோய் செல்கள் உடலில் வேகமாகப் பரவுவதைத் தடுக்கிறது.
- இது மட்டும் இல்லாமல் இன்னும் பல மருத்துவக் குணங்களைக் கொண்டது வடவனம் மலர்.

- திருநீற்றுப் பச்சைக்கு உருத்திரச்சடை, பச்சை சப்ஜா, விபூதிப் பச்சிலை, பச்சைப் பத்திரி, திருநீற்றுப் பத்திரி போன்ற வேறு பெயர்கள் உள்ளன.
- வடவனம் என்பதைத் துளசி என்றும் கூறுகின்றனர்.
- பாடலில் துழாய் எனும் பெயரில் துளசி குறிப்பிடப்பட்டுள்ளதால் இதனைத் திருநீற்றுப் பச்சிலை என்றனர்.
- திருநீற்றுப் பச்சிலை, துளசி இனத்தைச் சேர்ந்த தாவரம் ஆகும்.
- இது தோற்றத்தில் துளசிச் செடியைப் போன்றே காணப்படும்.
- இதன் மலர்கள் வெள்ளை கலந்த ஊதா நிறத்தில் இருக்கும். நல்ல வாசனை மிகுந்தது இந்தச் செடி.
- திருநீற்றுப் பச்சையைக் கரும் துளசி என அறிஞர்கள் கூறுகின்றனர்.

**சுவாதி. கா**


**இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு**

# நூல் அறிமுகம்

## ஆகாயத்துக்கு அடுத்த வீடு

## மு. மேத்தா

ஆகாயத்துக்கு அடுத்த வீடு மு. மேத்தா அவர்களின் கவிதைத் தொகுப்பு ஆகும். இந்நூல் 2004ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 2006ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது பெற்றது.




இந்நூலில் மொத்தம் 49 தலைப்புகளில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பல ஆண்டுகளாக, மு. மேத்தாவின் கவிதைகள் பத்திரிக்கைகளில் தொடர்ந்து வெளிவந்தன. இந்த கவிதைகளின் தொகுப்பே ஆகாயத்துக்கு வீடு.

கவிஞர் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவிகள் மூவர் தர்மபுரியில் எரிக்கப்பட்டதையும், குஜராத் கலவரத்தையும், தஞ்சை வறுமையையும்,

குழந்தைகள் தீயில் கருகியதையும், நடிகை சில்க் ஸ்மிதா அவர்களின் தற்கொலையையும் பற்றிய தனது கருத்துகளைக் கவிதையாக வடித்துத் தந்திருக்கிறார்.

மேலும் இந்நூலில் காதல் கவிதைகளையும் எழுதியிருக்கிறார்.

கம்பன் காவியத்தில்
வாலி வதை
கண்ணே நீ செய்வது
வாலிப வதை

என்று அவர் குற்றப்பத்திரிகை என்னும் கவிதையில் காதலை எழுதியுள்ளார்.

மதிப்பீடு என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் விமர்சனங்களே விருதுகளைத் தரும் என்பது இளைய தலைமுறையினருக்கு ஊக்கம் தரும் வார்த்தைகளாய் அமைகிறது.

எழுதிக் கொண்டிருந்தான்
விமர்சனங்கள் வந்தன...
எழுதாமல் இருந்தான்
விருதுகள் வந்தன!

கன்னிமாடம் என்னும் கவிதையில் காதலி பிரிவைப் பற்றியும், இதயத்தின் தொலைபேசி என்னும் கவிதையில் ஏழெட்டுப் பக்கத்துக்குக் காதலன் காதலியின் தொலைபேசி

உரையாடல்களையும், பின் திருமணப் பத்திரிகை நீட்டும் சம்பவத்தையும் எழுதியிருக்கிறார். இன்னும் சில சிறு சிறு கவிதைகளும் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது. இந்த நூலின் பெயராக அமைந்துள்ள ஆகாயத்துக்கு அடுத்த வீடு எனும் கவிதையும் காதல் பிரிவைக் கூறுகிறது.

எந்த ஊரில் இருந்தால் என்ன
என் கடிதத்தை நீ
தொட்டவுடன் சிலிர்க்கும் எனக்கு
நீ பார்த்த பார்வைகளைத்
தொகுத்து வைத்திருக்கிறேன்
ஆல்பமாக
என்றெல்லாம் சொல்லிவிட்டு
அவசியம் அனுப்பி வை
உன் திருமண அழைப்பிதழை
எனக் காதலிக்கு கூறுவதாய் எழுதியுள்ளார்.

எளிமையான சொற்களில் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்துவதே கவிஞரின் தனிச் சிறப்பு. இந்நூலும் எளிய முறையில் சிறந்த கருத்துகளைப் பலவேறு கோணங்களில் வழங்குகிறது.

**அ. பவித்ரா, இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# பழமொழி நுண்பொருள்

**ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி**

ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்றால் அரசனைப் போன்ற செல்வம் உடையவனாக இருந்தாலும், தன் செல்வங்களை எல்லாம் இழந்து ஆண்டி ஆவான் என்பது இப்பழமொழிக்கு நாம் கூறும் பொருளாக இன்று வரை வழக்கத்தில் இருந்து வருகிறது.

**உண்மைப் பொருள்**

இதன் உண்மை பொருள் யாதெனில் ஆடம்பரமான தாய், பொறுப்பற்ற தந்தை, ஒழுக்கமற்ற மனைவி, துரோகம் செய்யும் உடன்பிறந்தார், சொல்பேச்சு கேளாத பிள்ளை இவை ஐந்தையும் பெற்றால் எப்படிப்பட்ட செல்வந்தனும் ஆண்டி ஆவான் என்பதே இதன் பொருள்.

அவன் தன் வாழ்க்கையை வெறுத்து ஒதுங்கிவிடுவான். அல்லது இவை போன்ற ஐந்தும் ஒருவர் வாழ்க்கையில் அமைந்துவிட்டால் அந்த வாழ்க்கையை வாழ்வதைவிட அதைத் துறந்து ஆண்டியாகப் போவதே மேல் என்று ஆண்டி ஆகிவிடுவான்.

**வ. உமாகேஷ்வரி**

**இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# அறிவியல் செய்திகள்

## நிலா

- பூமியின் இயற்கையான துணைக்கோள் நிலவு.
- நிலாவை நிலவு, அம்புலி, மதி, சந்திரன் எனப் பல பெயர்களில் அழைக்கிறோம். பூமியிலிருந்து நிலவு 250000 மையில் தொலைவில் உள்ளது.



- நிலவு பூமியைச் சுற்றி வர 29.32 நாட்கள் ஆகிறது.
- நிலவில் வளிமண்டலம் கிடையாது. காற்று மற்றும் வானிலை மாற்றங்கள் நிலவில் இல்லை.
- நிலவிற்குச் சென்றவர்களின் கால்தடங்கள் பத்து மில்லியன் ஆண்டுகளுக்கு அழியாமல் இருக்கும் என்கின்றனர்.

- ஔநிலவின் ஒரு புறத்தை மட்டும் தான் நம்மால் பார்க்க முடியும். மற்றொரு பகுதியைச் செயற்கை கோள் வழியாகவே பார்க்கிறோம்.
- ஔசூரியனைப் போன்று சந்திரனும் கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும். நேரம் மட்டும் நாளுக்கு நாள் மாறுபடும்.
- ஔஅமாவாசை அன்று நிலவு சூரியன் உதிக்கும் அதே நேரத்தில் உதித்து சூரியன் மறையும் நேரத்திலேயே மறையும்.
- ஔநிலவின் கருமையான பக்கமாக நாம் பார்ப்பது நீலப்பச்சை.
- ஔஒரே மாதத்தில் இரண்டு பௌர்ணமி வந்தால், இரண்டாவது பௌர்ணமி நீல நிலவு என அழைக்கப்படும்.
- ஔஉண்மையில் நிலா வட்ட வடிவமானது அல்ல முட்டை போன்ற வடிவுடையது.
- ஔ1969 ஜுலை 29ஆம் நாள் நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் முதன் முதலில் காலடி பதித்த நாள் பன்னாட்டு நிலவு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**ஷீலா. ரோ, இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# உணவே மருந்து

நாம் நாள்தோறும் உண்ணும் காய்கறி வகைகளில் ஏராளமான சத்துகள் நிறைந்துள்ளன. இவை நமக்கு தெரியாமலே சில நோய்களிலிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றன. நம்மை வலிமையாக்குகிறது.

ஒவ்வொரு காயிலும் அதிக எண்ணிக்கையிலான பயன்கள் நிறைந்துள்ளன. அவற்றில் சிலவற்றை மற்றும் கூறுகிறேன். இந்த ஒரு சில நன்மைகளை அறிந்தாலே பதப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உணவுகளைத் தவிர்த்து நம் வீட்டு உணவே நாட்டு மருந்தென உட்கொள்ள ஆரம்பித்துவிடுவோம்.

- ❖ கோவைக்காய் மூலைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்தும். கோழையை அகற்றும்.
- ❖ முருங்கை இதன் காய், இலை, பட்டை அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவை. இதயம் மற்றும் எலும்புகள் வலிமை பெற உதவும்.
- ❖ கேரட் கண் பார்வையைச் சரிசெய்யும்.

❖ முட்டை கோஸ் புற்று நோய், இதய நோய் ஏற்படுவதைத் தடுக்கும்.

❖ சுரைக்காய் கர்ப்ப்பையைப் பலப்படுத்தும்.

❖ பாகற்காய் சுவாசக்கோளாறு, இதயப் பிரச்சினைகள், கல்லீரல், மலச்சிக்கல் பிரச்சினைகளைத் தீர்க்கும். நோயெதிர்ப்பு சக்தியை அளிக்கும்.

❖ அவரைக்காய் இரத்தத்தைச் சுத்தமாக்கும், நோயெதிர்ப்பு சக்தியை அளிக்கும், சரும நோய்களைக் குணப்படுத்தும், அதிக சத்துகளை உள்ளடக்கியது.

❖ நெல்லிக்காய் நீண்ட நாள் வாழ வைக்கும். இதற்கு அதியன் ஔவைக்குக் கொடுத்த நெல்லிக்கனியே சான்றாகும்.



**பவித்ரா. சீ, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# விடுகதைகள்

1. பரந்த காட்டேறிக்குப் பக்கமெல்லாம்  சடை அது என்ன?
2. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டைகள் அது என்ன?
3. ஒற்றைக் கால் குள்ளனுக்கு எட்டுக்கை அவன் யார்?
4. வெள்ளைக்காரன் பூக்க வெகுபேர் காத்திருக்கிறார்கள் அவன் யார்?
5. பச்சைக்கிளி பறக்கமுடியாத கிளி கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி அது என்ன?
6. உணவை எடுப்பான் ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?
7. கையை வெட்டுவார், கழுத்தை வெட்டுவார் ஆனாலும் நல்லவர் அவர் யார்?
8. வெள்ளை ராஜாவுக்கு கருப்பு உடை அது என்ன?
9. முத்துக் கோட்டையில் மகாராணி சிறைபட்டிருக்கிறாள் அவள் யார்?
10. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அவன் யார்?

**ஏ. ரம்யா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## இசைக்கருவி

# பறை

பறை மிகத் தொன்மையான தோற் கருவியாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக்குரிய கருப்பொருள்களில் பறையும் ஒன்றாகும். இது தப்பு என்றும் அழைக்கப்படுகிறது.



இக்கருவியில் மூன்று அடிப்படை பாகங்கள் உள்ளன. வட்டச் சட்டம், மாட்டுத் தோல், சட்டத்தின் உட்புறத்தில் பொருத்தப்படும் உலோகத் தட்டு. 35 செ.மீ. விட்டம் கொண்ட வட்டச்சட்டத்தில் தோல் இழுத்துக் கட்டப்பட்டு ஒட்டப்பட்டிருக்கும். சட்டம் பொதுவாக வேப்பமரத்தில் செய்யப்பட்டிருக்கும். பறையை இசைக்க நீண்ட தட்டையான ஒரு மூங்கில் குச்சி, குட்டையான, பருத்த மற்றொரு குச்சி பயன்படுத்தப்படும்.

நமது நாட்டுப்புற இசைக்கருவிகளுக்குச் சொற்கட்டு உண்டு. உதாரணமாக உறுமி எனப் பெயர் பெறக் காரணம் புரூம் புரூம் என

உறுமுவது போல் ஒலி வருவதால். இதே போன்ற சொற்கட்டு பறைக்கு இல்லை. பறைக்கு மெட்டுக்கள் எழுதி வைக்கப்படவில்லை. பறை இசைப்பவர்களின் கூர்ந்த கவனிப்பு, பயிற்சி, ஆர்வம் காரணமாகக் கற்றுக் கொண்டனர்.

ரக்கட்ட ரக்கட்ட ரக்கட்ட
ரண்டக்க ரண்டக்க ரண்டக்க
டன்டணக்கு டனக்குனக்கு

இப்படி பல சொற்கட்டுகள் உள்ளன. அவை அடிப்படை அடிகளை மட்டுமே சுட்டுவதாக அமையும்.

"துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற இந்நான்கு அல்லது
குடியும் இல்லை"

துடிகொட்டுபவன், யாழ் மீட்டுவோன், பறையறைபவன், வெறியாடுபவன் ஆகிய கலைஞர்களைக் காட்டிலும் சிறந்த குடிகள் இல்லை என்று கூறி அவர்களைப் புகழ்ந்துரைக்கிறார் மாங்குடி கிழார் எனும் சங்கப் புலவர்.

ஐந்நிலத்தின் இசைக்கருவியாகப் பறை இசைக்கருவி இருந்துள்ளது. குறிஞ்சியில், தொண்டகச் சிறுபறை, முல்லையில் ஏறுங்கோட்பறை, மருதத்தில் தண்ணுமை, நெய்தலில் மீன்

கோட்பறை, பாலையில் ஆறெறி பறை என பறைகளின் பெருமை குறிக்கப்பட்டுள்ளது.

போரில் மன்னன் அடைந்த வெற்றியைப் பறையால் சாற்றியதை,

"இசைப் பறையொடு வென்றி நுவல"

என்று புறநானூறு கூறுகிறது.

திட்டைப் பறை, தொண்டகச் சிறுபறை, தொண்டகப் பறை, அரிப் பறை, மண்றோல் சிறு பறை, மென்பறை, இன்னிசைப்பறை, பொருநர் பறை, ஆடுகளப் பறை எனச் சங்க இலக்கியங்களில் பல்வேறு பெயர்களில் "பறை" குறிப்பிடப்படுகிறது.

உலகப் பொதுமறையாம் திருக்குறளில்,

"அறைபறை யன்னர் கயவர்" என்றும்,

"எம்போல் அறைபறை கண்ணாரகத்து" என்றும்,

"அறைபறை நின்று மோதிட" என்றும்

பறை ஓங்கி ஒலிக்கிறது.

பறை போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப்பறை, பேரோசைப் பறை, தட்டைப்பறை என்று வழங்கப்படுகிறது.

பகைவர் நாட்டைக் கைக் கொண்டபின் பறையறைந்து செய்தி அறிவித்தலும், வெற்றி பெற்ற பின் வெற்றிப்பறையிடுதலும், தோல்வியைப் பறையறைந்து தெரிவித்தலும் பண்டைய மரபாகும்.

வயலில் வேலை செய்யும் உழவர்கள் ஊக்கம் பெற மருதப்பறை ஒலிப்பர். நெல்லறுக்கும் பொழுது அரிப்பறை முழங்குவர். ஆறலைக் கள்வர் வழிப்பறி செய்யும் பொழுது பறை கொட்டுவர். மதம் பிடித்த யானையின் வருகையை அறிவிக்கப் பறை ஒலிப்பர். கழைக் கூத்தாடுபவர் களத்தின் கண் பறை முழங்குவர். செய்தி அறிவிக்கப் பறை முழங்குவர்.

இவ்வாறு தொன்மை மிகு தோற்கருவியான பறை இன்றும் வழக்கில் உள்ளது. நாட்டுப்புற மக்களால் போற்றப்பட்டு வருகிறது. இசைக்கும் மனிதனாலே உருவாக்கப்படும் இந்த இசைக்கருவியின் இசை நமது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை உணர்வெழச் செய்யும் அற்புத இசை.

நமது அனைத்துத் தருணங்களிலும் நம்மோடு இருந்த இசை இன்று இறப்பிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் இசைக்கருவியாக வர்ணம் பூசப்பட்டுள்ளது. பறையிசையின் உண்மை வண்ணத்தை உணர்வை உணர்ந்து இசையை வளர்ப்போம்.

**சா. பவித்ரா, இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## பொன்மொழிகள்

- பாதை இல்லையே என்று கவலைப்படாதே நீ நடந்தால் அதுவே ஒரு பாதையாகும். – டாக்டர் **அப்துல்கலாம்**
- உங்கள் வாழ்க்கை தற்செயலாகச் சிறப்பாக மாறாது மாற்றத்தால் அது சிறப்பாகிறது.- **ஜிம்ரோன்**
- உங்கள் சோகமான நேரத்தை மணலில் எழுதுங்கள் உங்கள் நல்ல நேரங்களைக் கல்லில் எழுதுங்கள். - **ஜார்ஜ் பெர்னாட்ஷா**
- கோழையும் முட்டாளுமே இது என் விதி என்பான். ஆற்றல் மிக்கவனோ என் விதியை நானே வகுப்பேன் என்று கூறுவான். **– சுவாமி விவேகானந்தர்**
- உடலின் வீரத்தைவிட உள்ளத்தின் வீரம் மிகவும் உயர்வானது. **– காந்தியடிகள்**

**ரா. பர்மித்தா**

**இளங்கலைத் தமிழ், மூன்றாமமாண்டு**

# தோழிக்குக் கடிதம்

**என் இனிய தோழி இனியாவிற்கு,**

நானும் என் பெற்றோரும் நலமாக இருக்கிறோம்.

நீயும் உன் பெற்றோரும் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன்.

உன்னிடம் நான் குற்றாலத்திற்குச் செல்வதாக முந்தைய கடித்தில் கூறியிருந்தேன் அல்லவா? நாங்கள் குடும்பத்துடன் குற்றாலம் சென்று வந்தோம். உனக்குக் குற்றால அனுபவத்தை வார்த்தைகளால் காண்பிக்கவே இந்தக் கடிதம்.

நாங்கள் அனைவரும் குடும்பத்துடன் பேருந்தில் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். குற்றால மலையில் இரண்டாயிரத்துக்கும் மேல் மூலிகைகள் உள்ளன. இதன் வழியாக வரும் மழைநீர் அருவியில் வருவதால், அருவி நீர் மருத்துவக் குணம் நிறைந்ததாக இருக்கும். குற்றாலத்தில் எட்டு அருவிகள் இணைந்துள்ளன, போன்றவற்றை கேட்டும் படித்தும் அறிந்திருக்கிறேன். ஆனால் அவற்றை நான் நேரில் பார்த்து மகிழ்ந்தேன்.

கொட்டும் அருவியின் ஓசையும், நிறமற்ற தண்ணீரும் நுரைபொங்கும் வேகத்தில் தூய வெண்ணிறம் கண்களைக் கவர்ந்தது. குற்றால அருவியில் குளிக்கும் போது, வேகமாகத் தண்ணீர் தலையில் விழ, உடலும் உள்ளமும் குளிர்ந்து இயற்கை அழகில் மகிழ்ந்தோம். குளித்து முடித்து உணவருந்தினோம்.

அருவியைச் சுற்றி, சிற்றுண்டி கடைகள், முப்பது வகையான வண்ண பழங்கள், நல்ல உணவு, சுத்தமான மலைத் தேன், மூலிகைப் பொடிகள், அல்வா கடை என ருசிக்க ஏராளம்.

குற்றால அருவியில் குளித்தது. இயற்கை எழிலைக் கண்டு கழித்தது, உடலையும் மனதையும் வலிமையடைய செய்ததாக இருந்தது. நீ என்னுடன் இல்லாதது குறையாக இருந்தது.

நான் உனக்குப் பிடித்த சில பொருட்களையும், தேன் மற்றும் மூலிகைப் பொடியையும் வாங்கி இந்தக் கடிதத்துடன் அனுப்பி உள்ளேன். உன் பதில் கடிதத்திற்கு ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

**என்றும் உன் அன்பு தோழி,**

**ர.வினோதினி, இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# சொல் விளையாட்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | சோ | வா | து | சா | ளு |
| ரி | ள | ற் | ளு | ள் | எ |
| க | ம் | பு | கொ | கோ | தி |
| வ | நெ | ல் | து | னை | க |
| ர | சா | மை | ரு | ப | ட |
| கு | ர | வ | ழ் | கே | ழ் |


**கட்டத்தில் மறைந்துள்ள தானியங்களின் பெயர்களைக் கண்டறிக.**

**சா. அகிலா, இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு**

## *விடுகதை விடைகள்*

1. ஆலமரம், 2. அடுப்பு, 3. குடை, 4. சோறு, 5. மாங்காய், 6. அகப்பை, 7. தையல்காரர், 8. உளுந்து, 9. நாக்கு, 10. நண்டு

# தூரிகைத் தூரல்




மோ. குளோரி

இளங்கலை ஆங்கில

இலக்கியம்



சீ.பவித்ரா, இளங்கலைத்தமிழ்

இரண்டாமாண்டு

## சொல் விளையாட்டு விடைகள்

நெல், சோளம், கோதுமை, வாற்கோதுமை, கேழ்வரகு, சாமை, தினை, கொள்ளு, எள்ளு, கம்பு, வரகு.



# துறை நிகழ்வுகள்

## நூல் மதிப்புரை

## 31.07.2024





## நூலகம் பார்வையிடல் – 23.08.2024






## கன்னிமரா பொது நூலகம், சென்னை

## மகாகவி நாள் – 11.09.2024










# கருத்தரங்கம் – 25.09.2024

## *ஆய்வு மற்றும் உருவாக்கம் மற்றும் மின்னூலகப் பயன்பாடு*











# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்

